**த. நா.ச.பே. எண் : 002** **நாள் : 11.01.2018**

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி எண்.110–ன் கீழ் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே.பழனிசாமி** அவர்களின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழ்நாட்டின் வரலாறும், தமிழ் மக்களின் பண்பாடும், மிகவும் தொன்மை வாய்ந்தவை ஆகும்! பூமியில், முதல் மனிதன் தோன்றியது **தமிழ் பேசும் நிலத்தில் தான்** என்று **மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர்** சொல் ஆராய்ச்சிகளால் விளக்கியுள்ளார்.

**“வட வேங்கடம் தென்குமரி ஆயிடைத்**
**தமிழ்கூறு நல்லுலகம்”**

என்று வடக்கே வேங்கட மலை முதல், தெற்கே குமரி வரை, **‘தமிழ்நாடு’** சீரோடும் சிறப்போடும் விளங்கியதை வரையறுத்துச் சொல்கிறார்!

தொடர்ந்து, இருபதாம் நூற்றாண்டில் இணையில்லாத் தமிழ்ப்பெருங்கவியாய் விளங்கிய **மகாகவி பாரதியார்,**

**“வள்ளுவன் தன்னை உலகினுக்கே – தந்து**
**வான்புகழ் கொண்ட தமிழ்நாடு” என்றும்**

**“கல்வி சிறந்த தமிழ்நாடு – புகழ்**
**கம்பன் பிறந்த தமிழ்நாடு”** என்றும்

‘தமிழ்நாடு’ என்ற உணர்வோடு பாடி அன்றைக்கே பரவசப்படுத்தினார்.

**“நம் நாடு தமிழ்நாடு,**
**நாமெல்லாம் தமிழ் மக்கள்”**

என்று புரட்சிக்கவிஞர் பாவேந்தர் பாரதிதாசனார் ஆணித்தரமாக உரைத்தார்.

இவ்விதமாக, ஆளுமைத் திறம்கொண்ட தமிழ்ப் புலவர்கள் ‘தமிழ்நாடு’ என்று வாயாரப் பாடி மனதார அழைத்த நாடு, நம் தமிழ்நாடு!

நம்மோடு ஆந்திரம், கர்நாடகம், கேரளம் இணைந்து, **‘பிரசிடன்சி ஆப் மெட்ராஸ்’** என்று ஆங்கிலத்திலும், **‘சென்னை மாகாணம்’** என்று தமிழிலும் அழைக்கப்பட்டு வந்த நிலையில், இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின்படி, மாநில பிரிவினை ஏற்படுத்தப்பட்ட பிறகு, **சென்னை மாகாணம்** என்னும் பெயரை மாற்றித் **‘தமிழ்நாடு’** எனப் பெயர் மாற்றப்படவேண்டும் என்று அன்றைக்கு ஆளுங்கட்சியாக இருந்த காங்கிரஸ் அரசின் முன் **1956,** ஜூலையில் கோரிக்கையினைக் **தியாகி சங்கரலிங்கனார்** அவர்கள் முன் வைத்தார்கள்.

**பேரறிஞர் அண்ணா** அவர்கள் தலைமையிலான அரசு அமைந்தவுடன், 1967-ஆம் ஆண்டு அப்போதைய **“சென்னை மாகாணத்திற்கு” “தமிழ்நாடு”** என்று பெயர் சூட்ட, சட்டமன்றப் பேரவையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அதன் தொடர்ச்சியாக, **1969-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 14-ஆம் நாள் “தமிழ்நாடு” என்று நமது மாநிலத்திற்கு பெயர் சூட்டப்பட்டது.**

பேரறிஞர் அண்ணா அவர்கள் 2-வது உலகத் தமிழ் மாநாட்டினையும், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் 5-வது உலகத் தமிழ் மாநாட்டினையும், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 8-வது உலகத் தமிழ் மாநாட்டினையும் சிறப்பாக நடத்தி, தமிழின் பெருமையையும், தொன்மையையும் உலகறிய செய்தார்கள்.

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் தமிழுக்கென்று தனிப் பல்கலைக்கழகத்தை தஞ்சாவூரில் நிறுவினார்கள். மதுரையில் உலகத் தமிழ்ச் சங்கத்தை தோற்றுவித்தார்கள்.

**மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா** அவர்கள் தமிழுக்கு மேலும் பெருமை சேர்க்கும் வகையிலும், தமிழர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிக்கும் வகையிலும், **சித்திரை முதல் நாளை மீண்டும் தமிழ் புத்தாண்டாக அறிவித்தார்கள்.** உலக நீதி நூலான திருக்குறளை அதிக மக்கள் பேசும் சீன, அரபு மற்றும் கொரிய மொழிகளிலும், பாரதியார், பாரதிதாசன் பாடல்கள் மற்றும் ஔவையாரின் **“ஆத்திச் சூடி”** ஆகியவை சீன மற்றும் அரபு மொழிகளிலும், மொழி பெயர்த்து தமிழர்களின் பெருமைகளை உலகறியச் செய்தார்கள். தமிழ் அறிஞர்களை சிறப்பிக்கும் வகையில்

**“முதலமைச்சர் கணினித் தமிழ் விருது”,**

**“தமிழ்த் தாய் விருது”**

**"தமிழ்ச் செம்மல் விருது"**

**"அம்மா இலக்கிய விருது"**

போன்ற 55 விருதுகளை அறிவித்தார்கள்.

தமிழுக்கு மேலும் மகுடம் சூட்டும் வகையில், தமிழ் மொழியின் தொன்மை, இலக்கியம், இலக்கணம் மற்றும் பண்பாடு தொடர்பான ஆய்வுகள் மேற்கொண்டு, தமிழ் மொழியின் சிறப்பினை ஆவணப்படுத்தி உலகெங்கும் கொண்டு செல்ல, அமெரிக்காவில் உள்ள **ஹார்வேர்டு பல்கலைக்கழகத்தில் தமிழ் இருக்கை அமைக்க மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் அம்மாவின் அரசு, 10 கோடி ரூபாய் வழங்கி உள்ளது.**

வரும் ஜனவரி 14-ஆம் நாள், வரலாற்று சிறப்பு மிக்க நமது மாநிலம் **"தமிழ்நாடு"** என்ற பெயரோடு 50-வது ஆண்டில் காலடி எடுத்து வைப்பதை முன்னிட்டு **"தமிழ்நாடு" பொன் விழா ஆண்டாக மாண்புமிகு அம்மாவின் அரசு கொண்டாட முடிவு செய்துள்ளது** என்பதை இந்த மாமன்றத்தில் தெரிவிப்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

நம் கண் போன்ற தமிழ் மொழி மற்றும் தமிழர்களின் பெருமையை பறை சாற்றும் வகையில், கலை, விளையாட்டு, கட்டுரை, கவிதை, பேச்சுப் போட்டி போன்ற நிகழ்ச்சிகள் சென்னையிலும்,அனைத்து மாவட்டங்களிலும் சிறப்பாக நடத்தப்படும். தமிழ் ஆராய்ச்சியில் சிறந்து விளங்கும் இளம் தமிழ் ஆய்வாளர்கள் தெரிவு செய்யப்பட்டு, சென்னையில் நடைபெறும் நிறைவு விழாவில் இவர்கள் அனைவரும் சிறப்பிக்கப்படுவார்கள்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் அம்மாவின் அரசு,

**"தமிழுண்டு, தமிழ் மக்களுண்டு - இன்பத் தமிழுக்கு நாளும் செய்வோம் நல்ல தொண்டு"** என்ற **பாவேந்தரின் வரிகளுக்கேற்ப** தமிழ் மொழியையும், தமிழ்நாட்டையும் கண்ணின் மணி போல தொடர்ந்து காத்து வரும் என்பதை இந்த மாமன்றத்தில் பெருமையோடு தெரிவித்துக் கொண்டு அமைகின்றேன்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**